DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR
DV 15 /2019

Deposition of Witness: PW1

| | | | |
|---|---|---|---|
| Name | பாண்டியம்மாள் | Father's Name | |
| Village | | Taluk | |
| Caste | | Calling | |
| Religion | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.01.2021.

**முதல் விசாரணை:-**

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். நான் இவ்வழக்கில் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியமாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். இதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்வரும் ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) 25.10.2009ம் தேதியில் மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் ஆகியோர்களின் திருமண அழைப்பிதழ் அசல் மசாஆ.1 ஆகும்.

2) 25.10.2009ம் தேதிய திருமணப் பதிவு ரசீது நகல் மசாஆ.2 ஆகும்.

3) மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) – மசாஆ.3.

4) 1ம் எதிர்மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) – மசாஆ.4

5) 05.10.2010ம் தேதிய மனுதாரரின் ஒரே பெண் குழந்தை பானுபிரியா பிறப்பு சான்றிதழ் நகல். (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) – .மசாஆ.5

6) 1ம் எதிர்மனுதாரரின் குடும்ப அடையாள அட்டை (Smart Card) நகல். (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) – .மசாஆ.6

7) 01.08.2017ம் தேதிய மனுதாரரின் ஒரே பெண் குழந்தை பானுபிரியா பள்ளி மாற்றுச்சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) – .மசாஆ.7

8) 27.02.2013ம் தேதிய 1ம் எதிர்மனுதாரரின் 2வது மனைவி மூலமாக பிறந்த சர்மிளாவின் பிறப்பு சான்றிதழ் நகல் – .மசாஆ.8

9) 20.06.2019ம் தேதிய 1ம் எதிர்மனுதாரர் மீது மனுதாரர் தேவாரம் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் நகல் . மசாஆ.9.

10) 20.06.2019 மேற்படி புகாருக்கு தேவாரம் காவல் நிலையத்தில் கொடுத்த ஏற்பு மனு ரசீது நகல் மசாஆ.10.

11) 20.06.2019ம் தேதிய மேற்படி புகார் விசாரணையில் தேவாரம் காவல்நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரர் எழுதிக்கொடுத்த வாக்குமூலம் நகல் மசாஆ.11.

12) 01.07.2019ம் தேதிய HMOP No.35/2012ன் நிலை மற்றும் உத்தரவு இணையதள பதிவிறக்க அசல் மசாஆ.12.

13) 21.09.2005 தேதிய 1ம் எதிர்மனுதாரரின் பெயரில் கூட்டாக அசையாச் சொத்துக்குரிய பாகபாத்திய விடுதலைப் பத்திரம் அசல் மசாஆ.13.

14) 18.10.2020 தேதிய 1ம் எதிர்மனுதாரரின் இரண்டாவது மனைவியை குறிப்பிடும் திருமணப்பத்திரிக்கை அசல் மசாஆ.14. ஆகும். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.